[1975 அக்டோபர் 23

கடல் அரிப்புத் தடுப்பு

*10 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகை பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாகை பகுதியில் வெள்ளையாறு கடலுடன் கலக்கும் இடத்தில் (மைல் 99/4—260) இடது கரையைச் சார்ந்து இருக்கும் குடிசைப் பகுதியை ஆற்று வெள்ளத்திலிருந்தும் கடலரிப்பிலிருந்தும் பாதுகாக்க தடுப்புச் சுவர் ஒன்று இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, நானும், நாகை சட்டமன்ற உறுப்பினரும் நம்பியார் குப்பம், கீச்சாங்குப்பம் போன்ற நாகை கடற்கரைப் பகுதிகளுக்குப் போயிருந்தோம். அங்கே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் இரண்டு பர்லாங் வரையில் கடல் வந்திருக்கிறது. நாம் புதிய பூம்புகாரை உண்டாக்கியிருக்கிறோம். டச்சுக்காரர்களின் கோட்டையை ரிப்பேர் செய்து இப்பொழுது காத்து வருகிறோம். அந்தப் பகுதியிலேயும் இரண்டு பர்லாங் தூரத்திற்கு கடல் அரித்து உள்ளே வந்திருக்கிறது. அவைகளைக் காப்பாற்றும் வகையில் ஏதேனும் துரிதமாகச் செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நாகை பகுதியில் வெள்ளையாறு கடலுடன் கலக்கும் இடத்தில் வெள்ளத்திலிருந்தும் கடலரிப்பிலிருந்தும் பாதுகாக்க வேண்டுமென்ற நிலைமையிருக்கிறது என்ற தகவல் அரசுக்குக் கிடைத்தவுடனேயே, அங்கே இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் தடுப்புச் சுவர் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. அங்கத்தினர் குறிப்பிடும் இடத்தைப் பற்றிப் பரிசீலிக்கலாம். பூம்புகாரைப் பற்றிக் கேட்டார்கள். அதுபற்றி அடுத்த கேள்வியில் வருகிறது. அப்பொழுது அதைப் பற்றிப் பதில் சொல்கிறேன்.